பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4

22 05 2024 **WEDNESDAY** **6.30 PM**

மாநிலசெய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

2. தேர்தல் பிரச்சாரத்தின்போது கண்ணியம் காக்கப்படுவதை காங்கிரஸ் மற்றும் பிஜேபி உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

3. தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 4 ஆயிரத்து 821 கோடி ரூபாய் செலவில் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. நதிநீர் பங்கீட்டு பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Sachin Khilari** தங்கப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<<<>>>>**

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இதன் காரணமாக கடல் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு சூறாவளி காற்று வீசக்கூடும் என்றார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>

தேர்தல் பிரச்சாரத்தின்போது நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை காங்கிரஸ் மற்றும் பிஜேபி உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா மற்றும் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கேவுக்கு கடிதம் எழுதியுள்ளது.

குறிப்பாக நட்சத்திர பேச்சாளர்கள் பிரிவினையை தூண்டும் வகையில் கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது என்றும், இதுகுறித்து உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும் என்றும் பிஜேபி தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளது.

இதேபோல், பாதுகாப்புப்படை தொடர்பான விவகாரங்களை அரசியலாக்க வேண்டாம் என்று காங்கிரஸ் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அரசியல் சாசனம் குறித்தும் தவறான கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது என்றும் நட்சத்திர பேச்சாளர்களுக்கு காங்கிரஸ் தலைவர் அறிவுறுத்த வேண்டும் என்றும் தேர்ல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தெரிவிப்பதை தவிர்க்கவும், கண்ணியம் காக்கப்படுவதையும் இருகட்சிகளும் உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

பிஜேபி மற்றும் காங்கிரஸ் சார்பாக பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

<<<<<<<>>>>

தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 4 ஆயிரத்து 821 கோடி ரூபாய் செலவில் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநிலம் முழுவதும் மருத்துவத்துறை சார்ந்த தொள்ளாயிரத்து 46 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சென்னை கீழ்பாக்கம் மனநல காப்பக வளாகத்தில் 35 கோடி ரூபாய் செலவில் ஆறு தளங்களுடன் கூடிய வளாகம் கட்டப்பட்டு வருவதாகவும், இது விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>

நதிநீர் பங்கீடு பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் தலைமை நிலையச்செயலாளர் திரு வேலுமணி விடுத்துள்ள அறிக்கையில், திமுக ஆட்சிக்கு வரும்போதெல்லாம் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரள அரசுகள் தடுப்பணை கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறை கூறியுள்ளார்.

இப்பிரச்சினையில் அம்மாநில அரசுகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த திமுக அரசு சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு வேலுமணி கோரியுள்ளார்.

<<<<<<<>>>>

தமிழகத்தில் உள்ள அரசுப்பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரந்தர ஆசிரியர்களை மட்டுமே கொண்டு நிரப்ப திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்களை தற்காலிக அடிப்படையில் நியமிப்பது சமூக நீதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

தரமான கல்வி வழங்குவதையும் உறுதி செய்ய முடியாது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நிரந்தர ஆசிரியர்களை நியமிப்பதே இப்பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என்றும் திரு ராமதாசு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழா மலர் கண்காட்சியுடன் இன்று தொடங்கியது.

இதில், மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட செல்பி பாயின்ட் இளையோரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் மக்களவைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

நாமக்கல் மாவட்டம் **A K** சமுத்திரத்தில் உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி உமா தலைமையில இன்று நடைபெற்றது.

----------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பகவதி அம்மன் கோவில் வைகாசி திருவிழா தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

---------------------

வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜப்பானின் **Kobe**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் குண்டு எறிதல் பிரிவில் **Sachin Khilari** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Club Throw** பிரிவில் **Dhrambir** வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஐந்து தங்கம், நான்கு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

-----------------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்கொரியாவின் **Yecheon**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 233-க்கு 229 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவை வென்றது.

-------------------

ஆசிய மகளிர் சேலஞ்சர் கோப்பைக்கான வாலிபால் போட்டி பிலிப்பைன்சின் மணிலாவில் இன்று தொடங்கியது.

இந்தியா முதல் ஆட்டத்தில் 25-17, 25-23, 25-21 என்ற புள்ளிக் கணக்கில் ஈரானை வென்றது.

-----------------

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் சுமித் ரெட்டி – சிக்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் கிருஷ்ண பிரசாத் - சாய் பிரதீக் இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் கிரண்ஜார்ஜ்-ம், மகளிர் ஒற்றையர் பிரிவில் பி வி சிந்து மற்றும் **Ashmita Chaliha**-வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

------------

**Kachreti** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-------------

கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

----------------

பெல்ஜியத்தில் இன்று தொடங்கிய புரோ ஹாக்கி லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா – அர்ஜென்டினா இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

மகளிர் பிரிவில் அர்ஜென்டினா 5-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

-------------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் நேரடியாக பங்கேற்கிறார்.

---------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் ராஜஸ்தான் அணி இன்று பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<END>>>>